**செய்தி வெளியீடு எண்: 370** **நாள்: 08.06.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (8.6.2018) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் **அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம்** மற்றும் **அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம்** ஆகிய திட்டங்களை தொடங்கி வைத்தார்கள்.

உயர்தர சுகாதார சேவையை வழங்குவதில் மட்டுமல்லாது, தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்களால் ஏற்படும் சவால்களை வெற்றிகரமாக சமாளித்து தமிழ்நாட்டு மக்களின் சுகாதாரத்தை பேணிக்காப்பதில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, முன்னோடியாக விளங்கி வருகிறது. ஏழை எளிய மக்களுக்கு தரமான மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்பதற்காக, அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டமைப்புகளை வலுப்படுத்தி, நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டு, அரசு மருத்துவ நிலையங்களில் உயர்தர மருத்துவ வசதி பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

நோய் இருப்பது உரிய நேரத்தில் கண்டறியப்பட்டால் தான், தக்க சிகிச்சை பெற்று பூரண குணம் அடைய இயலும். பல தனியார் மருத்துவமனைகள், முழு உடல் பரிசோதனைக்கு அதிக கட்டணம் வசூலிப்பதால், ஏழை எளிய மக்களால் இந்த பரிசோதனையை செய்து கொள்ள இயலவில்லை. இதனை உணர்ந்த, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், குறைந்த கட்டணத்தில் முழு உடல் பரிசோதனைத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று அறிவித்து, முதல்கட்டமாக சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம் மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம் ஆகிய திட்டங்களை கடந்த 1.3.2016 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்த திட்டத்தின் கீழ் அம்மா கோல்ட் பரிசோதனைக்கு ஆயிரம் ரூபாயும், அம்மா டைமண்டு பரிசோதனைக்கு இரண்டாயிரம் ரூபாயும், அம்மா பிளாட்டினம் பரிசோதனைக்கு மூன்றாயிரம் ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் இதுவரை 26,900 நபர்கள் மேற்கண்ட பரிசோதனையை செய்து பயன்பெற்றுள்ளனர்.

இது தவிர, கிராமப் பகுதிகளில் 30 வயதுக்கு மேற்பட்ட கிராமப்புற மக்கள் கட்டணம் ஏதுமின்றி அனைத்து அடிப்படை பரிசோதனைகளும் செய்துகொள்ள, **அம்மா ஆரோக்கியத் திட்டம்**, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த 1.3.2016 அன்று தொடங்கப்பட்டது. தற்போது 400 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 31 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 99 அரசு மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் இதுவரை சுமார் 25 லட்சம் நபர்கள் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர்.

அதேபோன்று, **சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிகிச்சை மருத்துவமனையில், பொதுமக்கள் முழு உடல் பரிசோதனை செய்து கொள்ளும் வகையில், 2 கோடியே 28 லட்சம் ரூபாய் செலவில் நவீன கருவிகளுடன் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று, அம்மருத்துவமனையில் அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம் மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம் ஆகிய திட்டங்களை தொடங்கி வைத்தார்கள்.**

அம்மா கோல்ட் பரிசோதனையில் முழு இரத்த பரிசோதனை, சிறுநீரக பரிசோதனை, இரத்த சர்க்கரை பரிசோதனை (உணவுக்கு முன் – உணவுக்கு பின்), சிறுநீரக இரத்த பரிசோதனைகள், இரத்த கொழுப்பு பரிசோதனைகள், கல்லீரல் இரத்த பரிசோதனைகள், ஹெப்படைடிஸ் பி இரத்த பரிசோதனைகள், இரத்த வகை மற்றும் ஆர்.எச்(Rh) பரிசோதனை, இருதய சுருள் படம், எண்ணியல் நெஞ்சு ஊடுகதிர் படம், மீயொலி பரிசோதனை (ULTRA SOUND - Abdomen), கர்ப்பப்பை வாய் பரிசோதனை (Pap Smear) ஆகியவைகளும்; அம்மா டைமன்ட் பரிசோதனையில் அம்மா கோல்ட் பரிசோதனைகளுடன் எதிரொலி இதய துடிப்பு அளவீடு, (ECHO) புரோஸ்டேட் பரிசோதனை (PSA), தைராய்டு பரிசோதனைகள், ஹெச்பிஏ1சி (HbA1C) ஆகிய பரிசோதனைகளும்; அம்மா பிளாட்டினம் சிறப்பு பரிசோதனையில் அம்மா டைமன்ட் பரிசோதனைகளுடன் எண்ணியல் மார்பக சிறப்பு பரிசோதனை (Mammogram), டெக்ஸா ஸ்கேன் (Dexa Scan), எலும்பு உறுதித்தன்மை (Bone Profile– Vit. D, Calcium, Phosphorous & PTH) ஆகிய பரிசோதனைகளும் செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர், டாக்டர் பி. உமாநாத், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர். எட்வின்ஜோ, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர், டாக்டர். நாராயணபாபு, தொடர்பு அலுவலர் டாக்டர் வி.ஆனந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 8.6.2018